சுருக்கம்

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் – மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் தயாரிக்கும் பட்டயப்பட குறும்பட தயாரிப்புச் செலவினத் தொகையை ரூ. 8,000/– லிருந்து ரூ. 15,000/– ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (தி.தொ.1)த் துறை

அரசாணை (ப) எண். 37

நாள் . 06.02.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
தை 23.

படிக்கப்பட்டது:

முதல்வர் (பொ), எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம், சென்னை – 113 அவர்களின் கடிதம் எண். 911 /அ1/2010 நாள் 25.07.2011 மற்றும் 04.01.2012.

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஆய்வுக் கூட்டத்தின் போது எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் தயாரிக்கும் குறும்படத்திற்கு வழங்கப்படும் தயாரிப்பு செலவினத்திற்காக ரூ.8,000/-லிருந்து ரூ.15,000/- ஆக உயர்த்தி வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

2. தற்போது செலவினமாகக் கணக்கிடப்பட்ட ரூ 15,000/–ஐ மாணவர் நலன் கருதி அனுமதிக்கலாம் என்றும் இதனால் அரசுக்கு ஒரு வருடத்திற்கு (ரூ 15000x14 பட்டயப்படங்கள்) ரூ 2.10 இலட்சம் செலவினம் ஏற்படும் என்றும் கூடுதல் செலவினமாக தோராயமாக ஆண்டிற்கு ரூ.1.00 இலட்சம் மட்டும் ஏற்படும் என்றும் மாணவர்கள் நலன் கருதி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள செலவின விவரங்களை கருத்தில் கொண்டு, தற்போது ஒப்பளிக்கப்பட்டு வருகிற தொகையான ரூ. 8,000/–லிருந்து ரூ 15,000/–ஆக உயர்த்தி வழங்க உரிய ஆணை பிறப்பிக்குமாறு எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன முதல்வர் (பொ) அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

| வ எண் | இனம் | தற்போது உள்ள செலவின விவரம் | உயர்த்தக் கோரியுள்ள செலவின விவரம் |
|---|---|---|---|
| 1 | நடிகர்/நடிகையர் ஊதியத்தொகை செலவினம்<br>(Actors Remuneration) | ரூ 1500/–<br>(3 நாட்கள்) | ரூ 3500/– |
| 2 | ஒப்பனைத்தொகை செலவினம்<br>(Make up charges) | ரூ 1500/– | ரூ 1500/– |
| 3 | ஆடை அணிகலன்கள் செலவினம்<br>(Costume charges) | ரூ 2000/– | ரூ 2000/– |
| 4 | அரங்கப் பொருட்கள் செலவினம்<br>(Set Properties) | ரூ 2000/– | ரூ 2000/– |
| 5 | தொழில் நுட்பக் கலைஞர்களின் போக்குவரத்துக் கட்டண செலவினம்<br>(Out doorTechnician / Articians) | – | ரூ 1000/– |
| 6 | இசை இயக்குதல் செலவினம்<br>R R Music Expenses | ரூ 1000/– | ரூ 1000/– |
| 7 | வீடியோ பதிவு கட்டண செலவினம்<br>(Telecine Charges) | – | ரூ 1000/– |
| 8 | சிறப்பு ஒலி சேர்ப்பு மற்றும் பின்னணிகுரல் சேர்ப்பு செலவினம்<br>(Sound effects)<br>(Dubbing charges) | – | ரூ 1000/– |
| 9 | சிறப்பு தொழில்நுட்ப படப்பிடிப்பு சாதனங்கள் வாடகை செலவினம்<br>Hire charges for special Shooting equipments | – | ரூ 1000/– |
| 10 | படச்சுருள்களை வண்ணமேற்றுதல் செலவினம்<br>Colour grading of Negative film | – | ரூ 1000/– |
| | மொத்தம் | ரூ. 8000/– | ரூ. 15,000/– |

3. எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் முதல்வர் (பொ) அவர்களின் கோரிக்கையினை அரசு கவனமாக பரிசீலனை செய்து அதனை ஏற்று அந்நிறுவனத்தில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் தயாரிக்கும் குறும்படத்திற்கு தயாரிப்பு செலவினத்திற்காக வழங்கப்படும் தொகை விலைவாசி உயர்வு காரணமாக மாணவர்களுக்கு வழங்கப்படும் தொகை 2011–2012 ஆம் நிதி ஆண்டு முதல் ரூ.8,000/-லிருந்து ரூ.15,000/- (ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3 ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2220. செய்தி மற்றும் விளம்பரம் – 01. திரைப்படங்கள் – 105. திரைப்படங்கள் தயாரித்தல் - I. திட்டத்தில் சேராதது – AJ. தமிழ்நாடு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் 33. தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல். – 03 சிறப்புப் பணி".

(குதொகு. 2220–01–105 AJ 3337)

5. மேலே பத்தி 3 –ல் உயர்த்தி வழங்கப்பட்ட தொகைக்கான கூடுதல் நிதி 2011–2012 ம் ஆண்டுக்கான வரவு – செலவு மதிப்பீட்டில் உள்ள ரூ. 2,00,000/– போக கூடுதல் தொகை ரூ. 10,000/– க்கு மட்டும் 2011–2012 ம் ஆண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3–ல் உயர்த்தி வழங்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட முதல்வர் (பொ), எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை – 600 013 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3 – ல் அனுமதிக்கப்பட்ட கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2011–2012 ம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(கு.வ.அ.நி(ம) செ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 9 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 3426/நிதி (கு.வ.அ.நி(ம)செ)/2012, நாள் 06.02.2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1567 (ஆயிரத்து ஐநூற்று அறுபத்தேழு)ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

மூ. இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
முதல்வர், (பொ) எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை- 113.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 35.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.

<u>நகல்</u>
செயலாளரின் தனிச்செயலாளர், தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை-9.
மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (வரவு செலவு)த் துறை, சென்னை- 9.
இணை இயக்குநர் (நிர்வாகம்), செய்தி மக்கள் தொடர்புத் துறை,சென்னை–9.
நிதி (கு.வ.அ.நி.(ம)செ / (வ.செ.பொ–II ) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

4. மேலே பத்தி 3 ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

> "2220. செய்தி மற்றும் விளம்பரம் – 01. திரைப்படங்கள் – 105. திரைப்படங்கள் தயாரித்தல் - I. திட்டத்தில் சேராதது – AJ. தமிழ்நாடு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் 33. தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல். – 03 சிறப்புப் பணி''.
>
> (துதொகு. 2220–01–105 AJ 3337)

5. மேலே பத்தி 3 –ல் உயர்த்தி வழங்கப்பட்ட தொகைக்கான கூடுதல் நிதி 2011–2012 ம் ஆண்டுக்கான வரவு – செலவு மதிப்பீட்டில் உள்ள ரூ. 2,00,000/– போக கூடுதல் தொகை ரூ. 10,000/– க்கு மட்டும் 2011–2012 ம் ஆண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3–ல் உயர்த்தி வழங்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட முதல்வர் (பொ), எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை – 600 013 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3 – ல் அனுமதிக்கப்பட்ட கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2011–2012 ம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(து.வ.அ.நி(ம) செ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 9 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 3426/நிதி (து.வ.அ.நி(ம)செ)/2012, நாள் 06.02.2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1567 (ஆயிரத்து ஐநூற்று அறுபத்தேழு)ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

மூ. இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
முதல்வர், (பொ) எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை- 113.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 35.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.

<u>நகல்</u>
செயலாளரின் தனிச்செயலாளர், தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை-9.
மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (வரவு செலவு)த் துறை, சென்னை- 9.
இணை இயக்குநர் (நிர்வாகம்), செய்தி மக்கள் தொடர்புத் துறை,சென்னை–9.
நிதி (து.வ.அ.நி.(ம)செ / (வ.செ.பொ–II ) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.